## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## முதலாம் வருட இரண்டாம் அரையாண்டிற்கான கலைமாணித் தேர்வு

## (2017/2018)

## ED 1212 கல்வியும மனிதவள அபிவிருத்தியும் (Education and Human resource development)

நேரம் : 02 மணித்தியாலங்கள்

பகுதி I இல் இருந்து இரண்டு (02) வினாக்களையும், பகுதி II இல் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

---

### பகுதி I

1. (அ) மனித வள அபிவிருத்தி என்பதற்கு சமூகவியலாளர்கள், அரசியலாளர்கள் மற்றும் பொருளியலாளர்கள் கூறும் வரைவிலக்கணங்களைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (06 புள்ளிகள்)

   (ஆ) மனிதவள அபிவிருத்தியின் முக்கியத்துவம் 5 தருக. (05 புள்ளிகள்)

   (இ) ஒரு நிறுவனத்தில் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக முகாமையாளர் கையாளக்கூடிய உத்திகளைக் குறிப்பிடுக. (09 புள்ளிகள்)

2. (அ) மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்குத் தடையாக அமையும் காரணிகளைக் குறிப்பிடுக. (07 புள்ளிகள்)

   (ஆ) உலக நாடுகளில் பொதுவாகக் காணப்படும் கல்விக் கோட்பாடுகளைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

   (இ) இலங்கையின் கல்விக் கொள்கையானது 'அனைவருக்கும் கல்வி' என்ற அடிப்படைத் தத்துவத்தை நோக்கி நகர்த்தப்பட்டமைக்கான காரணங்களைத் தருக. (08 புள்ளிகள்)

3. (அ) கல்விக்கொள்கை உருவாக்கத்திற்கு அடிப்படையாக அமையும் மக்கள் நலன் கொள்கைகளைக் குறிப்பிடுவதுடன் அதில் பயன்படுத்தப்படும் 3 அணுகுமுறைகளையும் குறிப்பிடுக. (06 புள்ளிகள்)

   (ஆ) விளைதிறன் மிக்க தொடர்பாடல் என்றால் என்ன? இதில் எவ்வாறு தடைகள் தோன்றுகின்றன என்பதை சுருக்கமாகக் குறிப்பிடுக. (08 புள்ளிகள்)

   (இ) வகிபங்கு மாற்றச் சமூகமயமாக்கல் என்பதன் மூலம் நீர் கருதுவது யாது? (06 புள்ளிகள்)

### பகுதி II

4. (அ) மனித வள அபிவிருத்தியானது எவ்வாறு கல்விக்கு தனது பங்களிப்பினை வழங்குகின்றது என்பதை நடைமுறை உதாரணங்களை முன்வைத்து விளக்குக. (15 புள்ளிகள்)

(ஆ) ஒரு நாட்டின் அபிவிருத்தியானது அந்நாட்டின் தனிமனித அபிவிருத்தியிலே தங்கியுள்ளது என்பதனை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் சிலவற்றை உதாரணங்காட்டி தெளிவுபடுத்துக. (15 புள்ளிகள்)

5. (அ) சமூகவியல் படிமுறையில் தனியாள் முதல் சர்வதேச பிரஜை என்ற வகையில் மாற்றங்கள் உருவாவதில் கல்விச் சமூகவியலின் பங்கினை மதிப்பிடுக. (15 புள்ளிகள்)

(ஆ) மாற்ற முகாமைத்துவம் என்றால் என்ன? மாற்றத்தை அமுல் செய்வதற்கான ஒரு திட்டத்தில் இருக்க வேண்டிய அம்சங்களை விளக்குக. (15 புள்ளிகள்)

6. (அ) அழுத்தம் ஏற்படுவதற்கான தொழில்சார் காரணங்கள் எவ்வாறு ஒரு நிறுவன செயற்பாட்டில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்பதை பாடசாலையை மையமாகக் கொண்டு ஆராய்க. (15 புள்ளிகள்)

(ஆ) முரண்பாடுகளை முகாமை செய்வதில் ஒரு அதிபர் எதிர்கொள்ளும் சவால்களைக் குறிப்பிட்டு விளக்குக. (15 புள்ளிகள்)

பகுதி I – (20X2=40)
பகுதி II – (30X2=60)
மொத்தம் 40 + 60 = 100